ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




| வேணு : 11 | நவம்பர் – 2005 | கானம் : 4 |
|---|---|---|

www.madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட் சார்பில்

## ஸ்ரீ ப்ரேமிகவரதன் மருத்துவமுகாம் சிறப்பு நிகழ்ச்சிகள்

### மகப்பேறு மருத்துவ முகாம்

**இடம் : ஸந்த் ஏகநாத் ஹால், மதுரபுரி**
**தேதி : 02.10.2005**



Dr. கிரிராஜ் மற்றும் Dr. (Mrs) தீபா கிரிராஜ்



ஸ்ரீ ஹரி:

வசந்தா நினைவு அறக்கட்டளை, ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட் சார்பில்

# புற்றுநோய் விழிப்புணர்வு முகாம்

இடம் : மதுராபுரி மற்றும் கிராமங்கள், தேதி : 16.10.2005



**Dr. Ramanathan**
Vasantha Memorial Trust
Coimbatore











# மதுரமுரளி

Rs. 5/-

Registered as Newspaper in India R. No. 62828 / 95

| | |
|---|---|
| Regd. No. TN / PMG (CCR) / 521 / 03 - 05 | Licensed to Post without prepayment WPP No. 319/03-05 |

| | | |
|---|---|---|
| வேணு : 11 | நவம்பர் – 2005 | கானம் : 4 |




நவராத்ரீ உத்ஸவத்தில் கொலு

இடம் : மதுரபுரி

தேதி : 04.10.05 முதல் 11.10.05 வரை


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar. Website : www.madhuramurali.org;

e-mail : contact@madhuramurali.org ; publications@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 11 நவம்பர் 2005 கானம் : 4

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 119 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 4 |
| 4. | மாதம் ஒரு புத்தகம் | 7 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 91 | 9 |
| 6. | ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள் - 6 | 13 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 94 | 16 |
| 8. | மாலே மணிவண்ணா! - 38 | 18 |
| 9. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 38 | 22 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 119 | 27 |
| 11. | செய்திகள் | 30 |

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : சுருட்டி தாளம் : ஆதி

*பல்லவி*

***ஜய ஜய மங்களம் ஸ்ரீகுரோ***
***ஜய ஜய மங்களம் ஸத்குரோ (ஜய)***

*சரணங்கள்*

***கமலவிலோசன ஸ்ரீகுரோ***
***காருண்யமூர்த்தே ஸத்குரோ (ஜய)***

***பாகவதப்ரிய ஸ்ரீகுரோ***
***பரமதயாளோ ஸத்குரோ (ஜய)***

***பாவனசரித்ர ஸ்ரீகுரோ***
***பதிதோத்தாரக ஸத்குரோ (ஜய)***

***மங்களசரண ஸ்ரீகுரோ***
***முரளீதரநுத ஸத்குரோ (ஜய)***

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhuramurali" every month in English / Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamiji's lectures / essays
5. Articles on religion, philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas and more.

## 119

இந்த வருடம், நவராத்ரி உத்ஸவம் மதுரபுரி ஆஸ்ரமத்தில் நடைபெற்றது. நமது ஸங்கத்தை சேர்ந்த ஸ்ரீமதி கீதா சேதுராமன் அவர்கள் இந்த உத்ஸவத்தின் முழு பொறுப்பையும் ஏற்று நடத்திக் கொடுத்தார்கள். தினமும், காலையில் பாகவத பாராயணம் நடைபெற்றது. பிறகு, ஸ்ரீ ஸ்வாமிஜி ப்ரேமிகவரதனுக்கு விசேஷ பூஜையை செய்தார்கள். பிறகு, எல்லோருக்கும் தீர்த்த பிரஸாதம் வழங்கினார்கள்.

மதியம் மூன்று மணி முதல் மாலை ஆறு மணி வரை ஒவ்வொரு நாளும், சங்கீதம், நாட்யம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டவர்கள் அனைவரும் பள்ளிக்குழந்தைகள். அவர்களிடம் காணப்படக்கூடிய திறமைகளைப் பார்க்கும்பொழுது பிரமிப்பாக உள்ளது. கலந்து கொண்டவர்கள் அனைவரும், ஒருவரை ஒருவர் மிஞ்சும்படி தங்களுடைய திறமைகளைக் காட்டினார்கள். இந்த காலத்து குழந்தைகள் மிகவும் திறமைசாலிகளாக இருக்கின்றார்கள் என்ற பொதுவான கருத்தை மீண்டும் ஒருமுறை நிரூபிக்கும்படியாக இந்த நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன.

தினமும் மாலையில் ஆஸ்தான வித்வான் மல்லிகார்ஜுன ஸோமயாஜி அவர்களால் வேதாந்த உபந்யாஸம் நடைபெற்றது. அதன் பிறகு, தினமும், பகவானை ஊஞ்சலில் எழுந்தருள செய்யப்பட்டு ராதிகாஸதகம் பாடப்பட்டது. விஜயதசமி அன்று சென்னை ப்ரேமிகபவனம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு அவதார உத்ஸவம் நடைபெற்றது. பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் அலங்காரம் செய்விக்கப்பட்டு சிரவண தீபம் ஏற்றப்பட்டது. பகவானுடைய சந்நிதானத்தில் பலர் தீபம் ஏற்றினார்கள்.

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : மனதில் எதிர்மறையான எண்ணங்களே வரக்கூடாது என்றும், எப்பொழுதும் Possitiveஆக நினைக்க வேண்டும் என்றும் சொல்கின்றார்களே! இது சாத்யமான ஒன்றா?*

பதில் : எதிர்மறையான எண்ணங்களும் ஒருவருக்குத் தேவைதான். ஆனால், அது ஒரு வரம்பை மீறக்கூடாது. ஒருவிதத்தில், எதிர்மறையான எண்ணங்கள் நமக்கு ஒரு பாதுகாப்பைத் தருகிறது. உதாரணமாக, ஒருவர் காசிக்குச் சென்று கங்கையில் புனித நீராட வேண்டும் என்று ஆசைப்படுகின்றார். அவருடைய நீண்ட நாள் ஆசை, ஒரு நாள் நிறைவேறுகின்றது. அப்படி காசி சென்று கங்கையை பார்க்கின்றார். அவருக்கு ஆனந்தம் தாங்கவில்லை. வெள்ளம் கரைபுரண்டு ஓடுகின்றது. அவருடைய மனதில் வரும் முதல் எண்ணம், ''இவ்வளவு வெள்ளம் இருக்கின்றதே; ஜாக்ரதையாக இறங்காவிட்டால், படி வழுக்குமே,'' என்பதே ஆகும். இது தவறு என்று கூறமுடியுமா? இது ஒரு பாதுகாப்பு. ஆகவே, எதிர்மறையான எண்ணங்கள் வரக்கூடாது என்பதை விட, அது வரம்பை மீறக்கூடாது என்பதை பார்த்து கொள்வதுதான் மிகவும் அவச்யம்.

*கேள்வி : கண்ணாடி கீழே விழுந்து உடைந்தால் அபசகுனம் என்று கூறுகின்றார்களே! ஏன்?*

பதில் : மீதி எந்த ஒரு பொருளை எடுப்பதைக் காட்டிலும் கண்ணாடியை மிகவும் ஜாக்ரதையாக கையாள்வோம். அப்படி மிகவும் ஜாக்ரதையாக கையாளும்பொழுதே கண்ணாடி கீழே விழுந்து உடைந்துவிடுகின்றது என்றால், அவனுடைய மனதில் நிதானம் இல்லை என்று பொருள். அவனுடைய மனதில் ஒரு படபடப்பு இருப்பதால் நிதானம் தவறி கீழே போட்டு உடைத்துவிடுகின்றான். இத்தகைய படபடப்புடன் தான் அவன் தொடர்ந்து கார்யங்களைச் செய்ய நேரிடும். அப்படி செய்யும்போது அவை தவறாகவே முடியும். ஆகவேதான் கண்ணாடி உடைந்தால் அபசகுனம் என்று கூறுகின்றார்கள்.

*கேள்வி : ஞானிகளும் பூஜை செய்வது ஏன்?*

பதில் : ஒருவன், நீச்சல் கற்றுகொள்வதையும், நீரில்தான் கற்றுக் கொள்கின்றான். அதை நன்றாக கற்றுகொண்டபிறகும், தன்னுடைய திறமையை நீரில் நீச்சல் அடித்துதான் காட்ட வேண்டி உள்ளது. அதுபோல், ஆரம்பத்தில் பூஜை செய்வதே, பூரணமான ஞானத்துடன் பூஜை செய்வதற்காகத்தான், அதனால்தான். ஞானியும் பூஜை செய்கின்றான்.

*கேள்வி : கர்மா நேராக முக்தி தராது, சித்த சுத்தியைத் தரும்; பிறகு, முக்தி ஸாதனமான ஜபம், தியானம், விசாரம் போன்றவற்றில் ஈடுபட்டே முக்தி அடைய முடியும் என்று கூறுவது ஏன்?*

பதில் : உடல் ஈடுபட்டு செய்யும் பூஜையைவிட ஜபம் உயர்ந்தது. அப்படி ஜபம் செய்யும்பொழுது சப்தமாக செய்வதைக் காட்டிலும் உதடு முணுமுணுக்க ஜபம் செய்வது உயர்ந்தது. அப்படி உதடு முணுமுணுக்க ஜபம் செய்வதைக் காட்டிலும் மானஸிகமாக செய்யும் ஜபம் உயர்ந்தது. அப்படி செய்யும் ஜபமே தியானம் ஆகும். இதிலிருந்து என்ன தெரியவருகின்றது? உடல் ஈடுபட்டு நாம் செய்யும் கர்மயோகத்தில் மனது முழுவதுமாக எடுபடுமா? என்று சொல்ல முடியாது. பிறகு, ஏன் கர்மயோகம் சொல்லப்பட்டிருக்கின்றது என்றால், ஏதாவது வேலை செய்வதுகொண்டே இருப்பது மனிதனுடைய இயல்பு. அப்படிப்பட்ட அவனை நேரடியாக தியானம் செய் என்றால் அது முடியாது. ஆகவே, முதலில் பற்றற்று கர்மாக்களை செய்ய வேண்டும். அந்த பற்றற்ற கர்மாக்களை செய்ததன் பலனாக மனது சுத்தமடையும். அந்த சுத்தமான மனதில் தியானம் செய்ய, தியானமும் சுலபத்தில் சித்திக்கும். அதன் பலனாக சமாதி கைகூடும் என்பதே அதன் நோக்கமாகும்.

*கேள்வி : வேள்விகளுக்கு பலன் சுவர்க்கம். அப்படியிருக்க பற்றற்று வேள்விகளை செய்யும்பொழுது அவர்களுக்கு சித்த சுத்தி ஏற்படும் என்று எப்படி சொல்வது? அவர்களுக்கு சுவர்கமும் கிடைத்து, சித்தி சுத்தியும் கிடைத்தால்தான் அது சரியாக இருக்கும்.*

பதில் : கர்மாக்கள் தானாகத்தான் பலனை கொடுக்கும் என்றால் நீங்கள் சொல்வது சரியாக இருக்கும். ஆனால், கர்மாக்களுக்கு பலன் கொடுப்பவனாக ஈச்வரன் இருப்பதால், அவன் சுதந்திரன். ஆகவே, சுவர்கத்தைத் தரமால் இவன் கேட்ட சித்த சுத்தியைத் தருகின்றான்.

*கேள்வி : நான் புண்யகார்யம் செய்து அதன் பலனை பகவானுக்கு அர்ப்பணம் செய்துவிட்டால், எனக்கு அதன் பலன் வராது என்றால் அப்படியே ஆகும் என்கிறீர்கள். அதுபோல், நான் ஒரு பாவகார்யம் செய்துவிட்டு அதன் பலன் வேண்டாம் என்றால் அதுவும் நடக்க வேண்டும் அல்லவா?*

பதில் : ஒரு நாட்டில் இருக்கும் ஒருவர் செய்த நற்கார்யத்தை பாராட்டி அவர்களுக்கு அரசாங்கம் ஒரு விருது தருவதாக உள்ளது. அதை வேண்டாம் என்று அவர் சொன்னால், அவரை யாரும் நிர்பந்திக்க முடியாது. ஆனால், அவர் ஒரு குற்றம் செய்துவிட்டு அதன் தண்டனை வேண்டாம் என்றால், அரசாங்கம் விடுமா? அது போல்தான் இதுவும்.

*கேள்வி : இருட்டில் தீபம் வந்தவுடன், அந்த இடத்தில் உள்ள இருள் போய்விடுகின்றது. அதுபோல், சித்தம் சுத்தமானவுடன் ஞானம் (ஆத்மதர்சனம்) ஏற்பட்டு விடவேண்டும் அல்லவா?*

பதில் : இருளில் தீபபிரகாசம் ஏற்பட்டவுடன் இருள் போய் விடுகின்றது என்பது உண்மையாக இருந்தாலும், வரும் தீபத்தின் பிரகாசத்தை பொறுத்து அந்த அளவிற்குத்தான் இருட்டுப் போகின்றது அல்லவா!

அதுபோல், பூரணமான சித்தசுத்தி ஏற்பட்டவுடன்தான் ஆத்ம தரிசனம் ஏற்படும்.


**அறிவிப்பு**

மதுரமுரளி இதழில் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கட்டண விபரம்** (5 வரிகள் / 40 வார்த்தைகள்)

¼ Page Size Rs. 2000/-

விளம்பரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

''மதுரமுரளி''

51/24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083

Telephone : 044-24895875

email ID : publications@madhuramurali.org

# மாதம் ஒரு புத்தகம்

நூலின் பெயர் : ‘எனது நினைவுகள்’
எழுதியவர் : குற்றேவல் குஞ்சு ஸ்வாமிகள்
வெளியிட்டோர் : ஸ்ரீ ரமணாஸ்ரம வெளியீடு

நம் ஸ்வாமிஜியின் உபன்யாஸங்களில், ‘‘பகவானின் அவதாரங்களின் உண்மையான நோக்கம் ராவணன், கம்ஸன், போன்றவர்களை அழிப்பது அன்று. பக்தர்கள் ஸ்மரித்து, பாவனமடையும் பொருட்டு எண்ணற்ற லீலைகளை புரிவதே அவற்றின் நோக்கமாகும்’’ என்று சொல்வதுண்டு. எப்பொழுதும் ஆத்மாநுபவத்தில் திளைத்தவராய், திருவண்ணாமலையில் வீற்றிருந்து அருள்பாலித்த பகவான் ஸ்ரீ ரமணரின் அணுக்கத் தொண்டர்களுள் முக்கியமானவர் குற்றேவல் குஞ்சு ஸ்வாமிகள் என்ற மஹாத்மா. குருசேவைக்கு ஓர் இலக்கணமாய் வாழ்ந்தவர். அவர், ஸ்கந்தாஸ்ரமத்தில் பகவான் ரமணரைச் சரணடைந்தது முதல், பகவானின் ஸந்நிதியில் திகழ்ந்த சுவையான சம்பவங்களையும், மற்ற அடியார்கள் பற்றிய சுவாரஸ்யமான விஷயங்களையும் ‘எனது நினைவுகள்’ என்ற இந்த நூலில் அழகுற தொகுத்து, நூலைப் படிக்கும் அனைவரையும் பகவானின் சன்னிதிக்கே அழைத்துச்சென்றுவிடுகின்றார் என்று கூறினால் அது மிகையாகாது.

‘‘ஒரு சமயம், விருபாக்ஷி குகையில் ஸ்ரீ ரமண பகவான் இருந்தபோது, ஒரு முறை தனியாக மலையின் வடக்குப்புறமாக ஏறிச் செல்கையில் சில ஓடைகள் குறுக்கிட்டதைக் கடந்து போகும்போது, மூன்றாவது ஓடையின் அருகில் ஒரு பெரிய ஆலிலை கிடப்பதைக் கண்டு எடுத்துப் பார்த்தார்கள். அது பெரிய தேக்கிலை அளவு இருந்ததால் ஆச்சரியத்துடன் சுற்றுப்புறத்தைக் கவனித்தார்கள். அங்கு மிக உயரத்தில் மேடை போன்ற பெரிய பாறையும், அதனருகில் படர்ந்து விரிந்த ஆல விருக்ஷமும் இருப்பது புலப்பட்டது. ஸ்ரீ அருணாச்சல புராணத்தில் கூறப்பட்டுள்ள வடவாலவிருக்ஷம் இதுவாகத்தான் இருக்குமென நினைத்து அங்கே சென்று பார்த்துவர எண்ணி மெதுவாக ஏறத்தொடங்கினார்கள். கரடு முரடான பாதையில் சிரமத்துடன் நடக்கும்போது பக்கத்திலிருந்த புதரில் உள்ள

குளவிக் கூட்டில் பகவான் ரமணரின் இடது கால் தொடைபட்டுவிட்டது. உடனே அக்கூட்டியிலிருந்து மிகப்பெரிய மலைக்குளவிகள் கிளம்பி ஸ்ரீ பகவானின் இடது தொடையிலேயே கொட்டின. ''செய்த தப்புக்குத் தக்க தண்டனை பெறவேண்டியதுதான்!'' என ஸ்ரீ பகவானும் பொறுமையாக அங்கேயே நின்றார்கள். கால் சிவந்து வீங்கிவிட்டது. எந்த இடத்தால் தங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டதோ அந்த இடத்தை மட்டுமே அவைகள் கொட்டி, தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டதை பார்த்து, அந்த நிலையிலும் ஸ்ரீ பகவான் அதை அதிசயித்தார்கள்.

இதுபோன்ற சுவையான பல சம்பவங்களை, ஸ்ரீ குஞ்சு ஸ்வாமிகள் தொகுத்து வழங்கி, பகவான் ஸ்ரீ ரமணரின் திவ்ய சரித்திரத்தை ஸ்மரிக்கச் செய்து நம்மைப் பாவனமாக்குகின்றார்.

**– டாக்டர் ஆ. பாக்யநாதன்**

## அறிவிப்பு!

1995-ல் ஸ்தாபிக்கப்பட்டு, ஸாந்தீபனி குருகுலம் வேதபாடசாலை இன்றளவும், மதுரபுரி வளாகத்திலும், சென்னையில் உள்ள ஆலப்பாக்கத்திலும் நடந்து வருகின்றது. நம்முடைய பாரததேசத்தின் ஜீவனாக இருக்கக்கூடிய வேதத்தைக் காப்பாற்றுவதில் எல்லோருடைய பங்கும் இருக்கவேண்டும் என்பது ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் விருப்பம். அதன்படி, ஒவ்வொருவரும், தங்கள் தங்கள் வீட்டிலுள்ள ஸ்வாமி படத்தின் முன்பாக ஒரு உண்டியல் வைக்கவும். அதன்மேல் **''வேத நிதி''** என்று எழுதி தினமும் அதில் ஒரு ரூபாய் போட்டு வரவும். ஒவ்வொரு வருடமும், டிசம்பர் 31-ந் தேதி அதில் சேர்ந்த பணத்தை எடுத்து **ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் (Sri Sandeepani Gurukula trust)** என்ற பெயருக்கு DD எடுத்து 51/24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600083 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**- Trustees**

# எந்தரோ மஹானுபாவுலு - 91

மஹாப்ரபு, ரேமுணாய் கிராமத்தில் க்ஷீரசோரகோயிலில் கிடைத்த ப்ரசாதத்தை உண்டு, இரவு அங்கேயே கழித்துவிட்டு அடுத்தநாள் காலையில் எழுந்து நித்யகர்மாக்களை, முடித்து கோபீநாத்ஜியின் ஆரத்தியை தரிசனம் செய்துவிட்டு தன் பக்தர்களுடன் பயணத்தைத் தொடர்ந்தார். வழியில் வைதரணீ நதியை கடக்க வேண்டி இருந்தது. அதில் ஸ்நானம் செய்துவிட்டு மஹாப்ரபு ராஜ்புர் சென்றார். அங்கு வராஹ பகவானை தரிசனம் முடித்துவிட்டு யாஜ்புரி சென்று சிவலிங்கம் தரிசனம், விரஜாதர்சனம், ப்ரஹ்ம குண்டத்தில் ஸ்னானம் ஆகியவற்றை முடித்து நாபிகயா அடைந்தார். அங்கு, தசஅச்வமேத கட்டத்தில் கண்டகநகரம் அடைந்து அங்கு சாக்ஷிகோபால் என்னும் பகவானை தரிசனம் செய்தார். அங்கு வெகுநேரம் க்ருஷ்ணகீர்த்தனம் செய்தார். நகரத்து மக்கள் மஹாப்ரபுவின் கீர்த்தனத்தையும் நர்த்தனத்தையும் கண்டு பயன்பெறக் கூடினர். ப்ரபுவின் நர்த்தனத்தைக் கண்டு ஸ்திரீ புருஷர்கள் பரம ஆனந்தமடைந்து, பொம்மலாட்டத்து பொம்மைகள் போல் ஆட ஆரம்பித்தனர். தன் பக்தர்களுடன் ப்ரபு சாக்ஷிகோபால் ஆலயத்திலேயே அன்று ஓய்வு எடுத்துக்கொண்டார்.

இரவு என்பது பக்தர்களுடன் இறைவனின் கதைகளை பரிமாறிக்கொள்ளும் சமயம் அல்லவா? ப்ரபு, நித்யானந்தரைப் பார்த்து, ''ஸ்ரீ பாத! நீங்கள் பாரத தேசத்திலுள்ள முக்யமான தீர்த்தங்களுக்கு யாத்திரை செய்துள்ளீர்கள். நீங்கள் தரிசனம், ஸ்னானம் செய்யாத இடம் ஏதாவது மீதமுள்ளதா?'' என்று வினவினார்.

நித்யானந்தர், ''ப்ரபோ! என்னுடைய பன்னிரண்டு வருடங்கள் யாத்திரையிலேயே கழிந்துள்ளன'' என்றார்.

ப்ரபு, ''நீங்கள் இங்கும் முன்பேயே வந்திருக்கிறீர்களா?'' என்று கேட்க, நித்யானந்தர், தான் புரியிலிருந்து திரும்பும்போது சாக்ஷிகோபாலை தர்சனம் செய்துள்ளதாகக் கூறினார்.

ப்ரபு, ''ஒரு தீர்த்தத்திற்குச் சென்றால் அந்த தீர்த்தத்தின் மஹிமையை அவசியம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். இல்லையேல் அந்த யாத்திரையின் பலன் பாதிதான் கிடைக்கும்.

நீங்கள் எனக்கு சாக்ஷிகோபாலின் மஹாத்மியத்தைக் கூறுங்கள். இவனுக்கு ஏன் சாக்ஷிகோபால் என்று பெயர் வந்தது. இவன் யாருக்கு சாக்ஷி சொன்னான்?'' என்று கேட்டார்.

ப்ரபுவின் ஆணையைக் கேட்ட நித்யானந்தர், மெதுவாக, ''நான் எந்த புராணத்திலும் சாக்ஷிகோபாலின் கதையைப் படித்ததில்லை. இது, மிகவும் புராதனமான தீர்த்தமில்லை. சிறிது காலத்துக்கு முன்புதான் சாக்ஷிகோபால் பகவான் வித்யா நகரத்திலிருந்து இங்கு எழுந்தருளியுள்ளார். மக்களிடமிருந்து கேள்விப்பட்ட கதையை கூறுகிறேன்'' என்றார்.

தெலுங்கு தேசத்தில் கோதாவரி நதிக்கரையில் வித்யாநகர் என்ற புராதன நகரம் இருந்தது. அந்த நகரம் மிகவும் செல்வ செழிப்பும் வாணிபமும் நிறைந்த இடமாக திகழ்ந்தது. அந்த நகரத்தில் ஒரு தனவந்தர் இருந்தார். அவர் சிறந்த பக்தர். வீட்டிலுள்ள அவரது மகன்கள் பெரியவர்களாகிவிட்டதால் அவர்களே அனைத்து வேலைகளையும் கவனித்துக்கொண்டனர். பெரியவர் ஜபமாலையை வைத்துக்கொண்டு ஜபம் செய்வதிலேயே நிறைய நேரம் கழித்தார். அவருக்கு ஒரு மகள் திருமணம் ஆகாமல் இருந்தாள். பெரியவருக்கு தீர்த்த யாத்திரை செய்ய வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. அவரது வீட்டுக்கு அருகில் ஒரு ஏழை ப்ராம்மணப்பையன் இருந்தான். அவனுக்கு பெற்றோர்கள் இல்லாததால் ஏதாவது குற்றேவல் புரிந்து கிடைக்கும் பொருளால் தன் வாழ்வை நடத்திவந்தான். அவனுக்கு இறை பக்தியும் சிரத்தையும் நிறைய இருந்தது. ஏகாந்தமாக நிறைய பஜனை செய்வான். இப்படிப்பட்ட நல்ல பையனாக இருந்ததால் வயதான தனவந்தருக்கு அவனை மிகவும் பிடித்துவிட்டது. ஒருநாள் அவர் அந்த இளைஞனை ''தம்பீ உனக்கு விருப்பமானால் என்னுடன் தீர்த்த யாத்திரைக்கு வா. இருவருமாக சென்று வருவோம்'' என்றார்.

இளைஞனும் ''இதைவிட பெரிய பாக்யம் ஒருவனுக்கு என்ன இருக்கமுடியும்? நான் உங்களுடன் வருகிறேன்'' என்று கிளம்பினான்.

தனக்குப் பிடித்தமான துணை கிடைத்ததால் வயோதிகர் மிகவும் சந்தோஷமடைந்தார். இருவருமாக காசி, பிரயாகை, அயோத்யா, நைமிசாரண்யம், ப்ரஹ்மவர்த்தம் போன்ற தீர்த்தங்களுக்கு சென்று ஸ்னானம், தரிசனம் செய்துவிட்டு வ்ரஜமண்டலத்தை அடைந்தனர். அங்குள்ள பன்னிரண்டு வனங்கள், உபவனங்கள் ஆகியவற்றை

வலம்வந்து, நந்தகாவ், பர்சானா கோவர்த்தன் ஆகிய இடங்களுக்கு சென்றுவிட்டு ப்ருந்தாவனத்தில் வந்து சிறிது காலம் ஓய்வு எடுத்துக்கொள்ள தங்கினர்.

யாத்திரை முழுவதும் அந்த இளைஞன் வயதான பெரியவருக்கு பல தொண்டுகள் செய்தான். சிறிதும் சுயநலமின்றி அவரது அனைத்து தேவைகளையும் கவனித்துக் கொண்டான். பெரியவரும் அவனது சேவையால் மிகவும் மனம் மகிழ்ந்தார். அங்குள்ள கோபாலனின் கோவிலில் பெரியவர் தனது நன்றியை தெரிவிக்கும் வகையில் ''தம்பி! நீ என்னை மிகவும் நன்றாக கவனித்துக்கொண்டாய். ஒரு பிள்ளை கூட தன் தந்தைக்கு இப்படி தொண்டு செய்ய மாட்டான். உன் உபகாரத்தினால் நான் பெரிய கடனாளி ஆகி உள்ளேன். உனக்கு என்ன ப்ரதி உபகாரம் செய்யலாம் என யோசிக்கிறேன்'' என்றார்.

ப்ராம்மண இளைஞன், ''நீங்கள் எனது பூஜைக்குரியவர். மேலும் வயதானவர், பகவத் பக்தர், அண்டை வீட்டுக்காரர், எனது தந்தையைப் போன்றவர். உங்களுக்குத் தொண்டு செய்வது பெரிய தர்மம். இதில் என்னைப் புகழ என்ன இருக்கிறது? ஒரு மனிதன் செய்யவேண்டிய காரியத்தைத்தான் நான் செய்தேனே தவிர எந்தவித பலனையும் நான் உங்களிடமிருந்து எதிர்பார்க்கவே இல்லை'' என்றான்.

பெரியவர், ''அப்பா! நீ எதையும் எதிர்ப்பார்க்காவிட்டாலும் எனக்கு ஒரு கடமை உள்ளது. நீ செய்த மாபெரும் தொண்டிற்கு ஏதாவது ப்ரதி செய்யாவிட்டால் எனக்கு சாந்தி ஏற்படாது. உனக்கு என்னுடைய மகளை விவாஹம் செய்து தரலாம் என நிச்சயித்துள்ளேன்'' என்றார்.

இளைஞன் ஆச்சர்யமடைந்து, ''என்ன கூறுகிறீர்கள்! குலப் பெருமையும், தனமும், செல்வாக்கும் நிறைந்த நீங்கள் எங்கே! ஏழையான அனாதையான ப்ராம்மண குமாரனான நான் எங்கே! எனக்கும் உங்களுக்கும் சம்பந்தம் எப்படி சரிவரும்? சமமானவர்களுக்குள்தான் சம்பந்தம் ஏற்படவேண்டும்'' என்றான்.

பெரியவர், ''தனது பெண்ணுக்கு யோக்யமான வரனைத் தேடுவது தந்தையின் கடமை. தனம், வைபவம் இவற்றில் அதிக

கவனம் தராமல் குணவானான வரனைத்தான் தேர்ந்து எடுக்க வேண்டும். உன்னைப் போன்ற குணமும் நடத்தையும் கொண்டவனைவிட வேறு யார் என் பெண்ணுக்கு ஏற்ற வரனாக இருக்கமுடியும்? அதனால் உனக்கு என் பெண்ணைத் தருவேன். நீ இதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்'' என்றார்.

இளைஞன், ''நீங்கள் சம்மதித்தாலும் உங்கள் வீட்டிலுள்ளோர்கள் சம்மதிக்க வேண்டாமா? இந்த விஷயத்தைக் கேட்டாலே அவர்கள் கோபம் அடையப் போகிறார்கள்'' என்றான்.

''யார் கோபித்துக்கொள்வார்கள்? என் பெண் என்னுடையவள். அவளை நான் யாருக்கு வேண்டுமானாலும் தருவேன். இதை தடுக்க யாருக்கு என்ன உரிமை உள்ளது? நீ என் பெண்ணை ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்று பெரியவர் கூறினார்.

''எனக்கு ஏற்றுக் கொள்வதில் எந்தத் தடையும் இல்லை. ஆனால், நீங்கள் அங்கு சென்றதும் இங்கு நடந்ததை மறந்துவிடுவீர்கள். மனைவி, மகன்கள் என்று குடும்பத்தாரின் நிர்ப்பந்தத்துக்கு முன்பு உங்களால் ஏதும் செய்ய முடியாது'' என்று இளைஞன் சொன்னான்.

உடனே வயோதிகர் சற்று ஆவேசத்துடன், ''நான் இந்த கோபால் பகவானை சாக்ஷியாக வைத்துக்கொண்டு கூறுகிறேன்! உனக்கு என் பெண்ணை விவாஹம் செய்து தருவேன்! போதுமா! இப்போது நம்புகிறாயா?'' என்று கேட்டார். அந்தப் பையனும், ''சரி! ஊருக்கு சென்று நடப்பதைப் பார்ப்போம்'' என்று கூறினான்.

யாத்திரை முடிந்து இருவரும் வித்யா நகரத்தை அடைந்தனர். ப்ருந்தாவனத்தில் ஆவேசமாக சத்தியம் செய்து கொடுத்த பெரியவர் தன் வீட்டை அடைந்ததும் பெண்டாட்டி பிள்ளைகள் முன்பு பெட்டிப் பாம்பாக அடங்கிவிட்டார். அவர்கள் முன்பு இந்த விஷயத்தைக் கூற அவருக்கு தைரியம் வரவில்லை. ஒருநாள் மெதுவாக ஏகாந்தத்தில் தன் பையனிடம் விஷயத்தைக் கூற வீடு இரண்டாகியது. குடும்பமே அவரை எதிர்த்தது. பெரியவரால் ஒன்றும் எதிர்த்துப் பேச முடியவில்லை. இளைஞனை சந்திப்பதையே தவிர்த்துவிட்டார்.

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

# ஆதிசங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள் - 6

**– குடந்தை என். இராமசர்மா**

பக்தி, ஸாதன பக்தி என்றும் ஸாத்ய பக்தி என்றும் இருவகைப்படும் என்கிறார் ஆசாரியர். ஸாதன பக்தியால் பெறப்படுவது ஸாத்ய பக்தி. இதுவே ப்ரேம பக்தி. இந்நிலையில் பக்திக்காகவே பக்தி. காரணம் சொல்லி நிரூபிக்கப்பட முடியாத தாயின் பாசமும், மனைவியின் நேசமும் போன்றது.

கண்களால் காணப்படாத கருவில் வளரும் குழந்தைக்காக நியமங்களும் விரதங்களும் கடைப்பிடிக்கிறாள் தாய். பெற்ற பின், கண்களால் கண்டபின் அதற்கே ஆட்பட்டவளாகிறாள்.

முதல் நிலையில் எழும் பாசம் ஸ்தூலம். இரண்டாவது நிலையில் குழந்தை பிறந்த பின் எழும் பாசம் சூக்ஷ்மம். பெயரில்லை, வடிவமில்லை. கருவிலுள்ள குழந்தையின் மேல் எழும் பாசம் ஸ்தூலம். நாம ரூபங்களோடு தோன்றியபின், நாம ரூபங்களைக் கடந்து அனுபவிக்க விழையும் அனுபவிக்கும் நிலை சூக்ஷ்மம்.

பக்தியும் இப்படித்தான் என்கிறார் ஸ்ரீசங்கரர்.

स्थूला सूक्ष्मा चेति द्वेधा हरिभक्तिरुध्दिष्टा ।
प्रारम्भे स्थूला स्यात् सूक्ष्मा तस्याः सकाशाश्च ॥

*ஸ்தூலா சூக்ஷ்மா சேதி*
*த்வேதா ஹரி பக்திருத்திஷ்டா ।*
*ப்ராரம்பே ஸ்தூலா ஸ்யாத்*
*ஸூக்ஷ்மா தஸ்யா: ஸகாசாஸ்ச்ச ॥*

ஸ்தூலம், சூக்ஷ்மம் என்று ஹரிபக்தி இருவிதம். ஆரம்ப நிலையில் ஸ்தூலம். இதுவே முடிவில் சூக்ஷ்ம பக்தியாக பரிணமிக்கிறது.

மரமோ, செடியோ, கொடியோ எதுவும் மலர்ந்தாலே அழகு. மலர் மலர்ந்தாலே மணம். மணம் எழுந்தாலே மனம். மனம்

வசமானாலே ப்ருந்தாவனம். மனம் ப்ருந்தாவனத்தைச் சென்றடையும் வரையில், ப்ருந்தாவனமாகும் வரையில் ஸ்தூல பக்தி. ப்ருந்தாவனமாகிவிட்டால் கண்ணன் வந்தாக வேண்டும். கண்ணன் வந்தபின் 'ப்ரேம ரஸம்' திண்ணம். வாழ்வில் மிகும் வண்ணம்.

அப்போது சீடன், ஆசார்யாளைப் பார்த்து, ''ஸ்தூல பக்தி என்றால் என்ன? சூக்ஷ்ம பக்தி என்றால் என்ன? முதலாவது எப்படி இரண்டாவது நிலைக்குக் கொண்டு சேர்க்கும்?'' என்று கேட்டான்.

''அவரவர்க்குரிய வர்ணாச்ரம தர்மங்களை உறுதியுடன் கடைப்பிடிப்பது, ப்ரதிமையிலோ சாளக்ராமத்திலோ ஹரியை ஆராதிப்பது, பற்பல பூஜைகளும் உத்ஸவங்களும் முறையாகச் செய்வது, இடைவிடாத ஹரிதாஸர்களின் ஸங்கம், ஹரிகதா ச்ரவணத்தில் நீங்காத பற்று, வாய்மை, பிறன் மனை நோக்காமை, மற்றவர் பொருளை மனதாலும் தீண்டாமை, புறங்கூறாமை, வம்புப் பேச்சில் வெறுப்பு, தீர்த்த யாத்திரை, கண்ணனைக் காணும் நாள் எந்நாளோ என்ற தாபம் - இவை ஸ்தூல பக்தியின் அடையாளங்கள். இவை பாகவத ச்ரவணத்தால் வரும். 'ஹ்ருதி ஆவிசதே ஹரி:' என்று தன் கதை கேட்பவன் செவிகள் வழியே சப்த ரூபத்தில் கண்ணன் புகுகிறான். நெஞ்சில் நிற்கிறான்.

க்ஷேத்ர ஸந்யாஸி போல் தங்கிவிடுகிறான். தான் தங்குமிடம் ஆதலால் தானே நெஞ்சை சுத்தப்படுத்திவிடுகிறான். வெளிச்சம் இல்லாமல் அக்ஞான இருட்டில் மூழ்கி இருந்த சித்தத்தை ஞான வெளிச்சத்தால் பிரகாசிக்கச் செய்கிறான். ஸ்தூல பக்திக்குப் பயன் இது. கரும்பு கற்கண்டாகிறது.

சூக்ஷ்ம பக்தி எப்படிப்பட்டது என்பதை ஸ்ரீ சங்கரர் தனக்கே உரித்தான பாணியில் கூறுகிறார்.

स्मृति सत्पुराण वाक्यै र्यथा श्रुतायां हरेर्मूर्त्तौ ।
मानसपूजाभ्यासो विजननिवासेऽपि तात्पर्यम् ॥

*ஸ்மிருதி ஸத்புராண வாக்யை:*
*யதா ஶ்ருதாயாம் ஹரேர் மூர்த்தௌ ।*
*மாநஸ பூஜாப்யாஸோ*
*விஜந நிவாஸேऽபி தாத்பர்யம் ॥*

ஸ்மிருதிகள் என்று சொல்லக்கூடிய தர்ம சாஸ்திரங்களிலும், விஷ்ணு புராணம், ஸ்ரீமத் பாகவதம் போன்ற ஸாத்விக புராணங்களிலும் சொல்லிய வண்ணம் நெஞ்சில் ஹரியின் வடிவத்தைத் தியானிப்பதும், மானஸபூஜையால் வழிபடுவதும், தனித்திருந்து கனிவாய்ச் சிந்தித்திருப்பதும் சூக்ஷ்ம பக்தியாகும்.

காணுமிடமெங்கும் கண்ணனே நீக்கமற நிறைந்திருக்கிறான் என உணர்வதும், எவ்வுயிர்க்கும் மனதாலும் தீங்கு நினையாமல் இருப்பதும், எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் நேசிப்பதும், தானாகக் கிடைத்ததில் நிறைவும், நான், எனது இல்லாதிருத்தலும், சினமின்மையும், மென்மையான பேச்சும், அறிவில் தெளிவும், இகழ்ச்சியிலும் புகழ்ச்சியிலும் மனம் மாறுபடாமல் இருப்பதும், விருப்பு, வெறுப்பு, லாபம், நஷ்டம், வெற்றி, தோல்வி போன்ற இரட்டைகளில் மனம் நிலை பெயராதிருத்தலும், எதற்கும் அஞ்சாமையும் சூக்ஷ்ம பக்தியின் அடையாளங்கள்.

தூக்கம், ருசி மிகுந்த உணவு, கேளிக்கை இவை தவிர்த்தலும், பற்று நீக்குதலும், இறையுணர்வில் உறைவதும், வீண் பேச்சிற்கு இடம் கொடுக்காமையும், கண்ணன் நினைவில் நட்ட கல் போல் ஸ்திரமாக நிற்பதும் சூக்ஷ்ம பக்தியாகும்.

ஹரி கீர்த்தனம், ஹரி கதா ச்ரவணம், (கண்ணன்) குழலிசை இவை காதுகளில் விழுந்ததும் மின்சாரம் பாய்ந்தது போல் மெய் மறப்பதும், மெய்யில் கரைவதும், மயிர்க் கூச்செறிவதும், கண்ணீர் மடைபோல் பெருகுவதும், ஆனந்தக் கூத்தாடுவதும் உண்டானால் ப்ரேம பக்தி நிலை பெற்றுவிட்டது என்று பொருள். ப்ரேமரஸம் எழும் நிலை. உலகம் நழுவும் நிலை. தழுவுதலும் நழுவுதலும் ஒரே சமயத்தில் நடக்கும் ஆனந்த நிலை. ஸ்ரீ சங்கர ரஸோக்தி இது.

(வளரும்)

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

# பாலகர்களுக்கு ஒரு கதை - 94

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**

ஒரு கிராமத்தில், ராமஸ்வாமி என்றொரு பயில்வான் வசித்து வந்தார். அவர் தினமும், தன்னுடைய வீட்டின் மொட்டைமாடியில் காலையிலும், மாலையிலும் உடற்பயிற்சி செய்வார். அவருடைய கட்டுமஸ்தான உடலும், உயரமும், அடர்ந்த பெரிய மீசையுமான அவருடைய தோற்றமும் காண்பவர்களை அச்சுறுத்த வைக்கும்.

அந்த ஊரிலே க்ருஷ்ணஸ்வாமி என்ற ஒருவர், தினமும் கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவார். அவர் கோவிலுக்குச் செல்லும்பொழுது பயில்வான் ராமஸ்வாமி வசிக்கும் தெரு வழியாகத்தான் செல்ல வேண்டும். க்ருஷ்ணஸ்வாமிக்கு, பயில்வான் ராமஸ்வாமியைப் பார்த்தாலே பயம். அந்த வீதிவழியாக செல்லும்பொழுது, மாடியில் ராமஸ்வாமி இருக்கின்றாரா? என்று பார்ப்பார். ராமஸ்வாமியை பார்த்தவுடன் இவருக்கு பயம் வந்து விடும். அந்த வீட்டை கடந்து செல்லும் வரையில் கண்களை மூடிக்கொண்டுவிடுவார். வாயினால் பகவானுடைய நாமங்களை முணுமுணுத்துக்கொண்டே செல்வார்.

தற்செயலாக ஒருநாள் பயில்வான் ராமஸ்வாமி இதைப் பார்த்தார். பிறகு, தினமும் தொடர்ந்து கவனிக்க ஆரம்பித்தார். தினமும் ஏன் இவர் நம் வீட்டை கடந்துச் செல்லும்பொழுது கண்களை மூடிக்கொண்டு விடுகின்றார். அதோடு மட்டும் அல்லாமல் வாயினால் ஏதோ முணுமுணுத்துக்கொண்டே செல்கின்றார் என்று யோசிக்க ஆரம்பித்தார். அவருக்கு பயம் வந்துவிட்டது. ஒரு வேலை நமக்கு எதிராக இவர் ஏதாவது துர்மந்திரத்தை ஜபம் செய்கின்றாரோ! என்ற கவலை வந்துவிட்டது.

பயில்வான் ராமஸ்வாமி, கிருஷ்ணஸ்வாமியை அழைத்தார். திடீர் என்று கிருஷ்ணஸ்வாமியின் கால்களில் விழுந்தார். ''என்னை எதுவும் செய்துவிடாதே. உன்னைப் பார்த்தால் எனக்கு எதிராக நீ ஏதோ மந்திரம் ஜபம் செய்கின்றாய் என்பது போல் தோன்றுகிறது. தயவு செய்து அப்படி எதுவும் செய்துவிடாதே!'' என்று கெஞ்ச ஆரம்பித்துவிட்டார்.

இதுதான் உலக இயல்பு. ராமஸ்வாமியை பார்த்து க்ருஷ்ணஸ்வாமி பயந்தார். க்ருஷ்ணஸ்வாமியை பார்த்து ராமஸ்வாமி பயந்தார். விலங்குகள் மனிதர்களால் தமக்கு ஏதாவது ஆபத்து வருமோ என்று நினைத்துதான் நம்மை தாக்குகின்றது. அதுபோல், நம்மை ஏதாவது அது செய்து விடுமோ என்று நினைத்து தான் அதை நாம் தாக்குகின்றோம். மனதில் உண்மையான பிரேமை வளர வளரத்தான் இந்த பயம் முற்றிலுமாக மறையும்.

ஸ்ரீ ஹரி:

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

- மதுரமுரளிக்கான சந்தா தொகையை, ''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'' என்ற பெயரில் மட்டுமே M.O. or D.D. ஆக அனுப்ப வேண்டும்.

  உள் நாடு : மூன்றாண்டு சந்தா ரூ. 180/-
  ஆயுள் சந்தா ரூ. 1000/-
  வெளி நாடு : வருட சந்தா ரூ. 300/-

- சந்தாவை காசோலையாக அனுப்ப வேண்டாம்.
- சந்தா எண், சந்தாதாரர் முகவரி இல்லாமல் வரும் சந்தா தொகையானது அவர்கள் பெயரில் எடுத்துக்கொள்ளமாட்டாது.
- மதுரமுரளி மாத இதழுக்கான தங்களுடைய சந்தா எண் Address label்ல் இரண்டாம் வரியில் உள்ளது.
- சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது அதை அந்த மாதத்தின் 15-ந் தேதிக்குள் எழுதி அனுப்பினால்தான் வரும் மாதத்தில் செயல்படுத்த முடியும்.
- மதுரமுரளி விஷயமாக அனுப்பும் தபால்களின் கவரில் பின்வருமாறு முகவரியை கட்டாயம் எழுதவும்.

**''மதுரமுரளி''**

51/24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083
Telephone : 044-24895875
email ID : publications@madhuramurali.org

# மாலே மணிவண்ணா - 38

சத்துவம், இராஜஸம், தாமஸம் என்ற மூன்று குணங்களில் ஸ்ரீமந்நாராயணன் சத்துவகுணவடிவமாகக் குறிப்பிடப்படுகிறான். இதனைக் கம்பர் தமது கடவுள் வணக்கம் பாடலில்,

*'சிற்குணத்தர் தெரிவரும் நன்னிலை*
*எற்கு உணர்த்தரி தென்னினும்...*
*முற்குணத்தவரே முதலோர் அவர்*
*நற்குணக் கடல் ஆடுதல் நன்று அரோ''*

என்று குறிப்பாகக் கூறினர். முற்குணத்தவர் என்றது முதல் குணமாகிய சத்துவ குணத்தைக் குறிப்பிடுகிறது. சத்துவ குண வடிவினராய திருமாலே முதற்கடவுள் ஆவர், அவரது குணப்பெருங்கடலில் திளைப்பது நன்று என்றார்.

சத்துவ குணத்துக்குரிய நிறம் வெண்மையாகும். எனவே, சத்துவ குணவடிவினராய திருமாலின் வ்யூக நிலையில் 'வெள்ளை' நிறம் திருமாலுக்குரியதாகக் குறிப்பிட்டது பொருத்தமானது எனலாம்.

ஒடுக்கப்பட்ட உயிர்களைத் தன்னிடமிருந்து மீளத் தோற்றுவிப்பதற்காகச் செய்யும் படைப்புக்குக் காரணமான வ்யூக நிலையே 'ப்ரத்யும்நன்' என்கின்ற மூன்றாவது நிலை. இந்த மூன்றாவது நிலையைப் பரிபாடல்.

''பொன் கண் பச்சை'' என்று கூறுகிறது.

'பச்சை' என்பது 'ப்ரத்யும்நன்' என்னும் வடமொழித் திரிபு என்றார் பரிமேலழகர். 'ப்ரத்யும்நன்' காமன் என்றும் கூறப்படுவான். அதுபற்றியே, 'பொன் கண் பச்சை' என்பதற்கு, 'சிவந்த உடம்பினை உடைய காமனே! என்று உரை தந்தார் பரிமேலழகர்.

படைப்பில் திடம் பெற்றுவிட்ட பயிரைப் 'பயிர் பச்சை பிடித்து விட்டது' என்று சொல்வது வழக்கு. ஆகவே, பச்சை என்பது படைப்பின் உறுதியை நிலைத்த தன்மையை எடுத்துக் காட்டும் அடையாளமாகும். எனவே, படைப்பு என்னும் தொழிலுக்குரிய வ்யூக நிலையில் 'ப்ரத்யும்நனை' 'பொன்கண் பச்சை' என்றார்.

'ப்ரத்யும்நன்' காமன் ஆதலன் படைப்புக்கு உயிர்களின் உடல் சேர்க்கைக்குக் காமமே மூலகாரணம் ஆதலின், படைப்புக்குரிய நிலை 'ப்ரத்யும்நன்' ஆயிற்று. உயிருடல் தோற்றத்திற்கு அகக் காரணம் காமனும், புறக்காரணம் பிரமனும் ஆவார்கள்.

பகவான் காமனாக, ப்ரத்யும்நனாக இருந்து, படைப்பிற்குரிய மூலகாரணத்தை உண்டாக்கி, தன்னில் பிரமனைத் தோற்றுவித்து அவனால் வடிவ வேறுபாடுகளை உண்டாக்கிப் படைப்பை நிறைவு செய்கிறான்.

*''தேவும் எப்பெருமாளும் படைக்கப்*
*பூவில் நான்முகனைப் படைத்த*
*தேவன் எம்பெருமானுக்கு அல்லால்*
***பூவும் பூசனையும் தகுமே.*** (திருவாய் 2:2:1)

என்று அருளிய நம்மாழ்வார்,

*''எல்லா எவ்வுயிர்க்கும் தாயோன்*
*தான் ஓர் உருவனே''* (திருவாய் 1:5:3)

என்றும் கூறியருளினார்.

பிரமன் படைப்புக் கடவுளாக இருந்து அனைத்தும் படைக்கவும், பகவானை 'எவ்வுயிர்க்கும் தாயோன்' என்றது, அப்பகவான் கொண்ட காமம்தான் உயிர்கள் பால் கொண்ட பெருவிருப்பம்தான் உயிர்களின் படைப்பிற்கு மூலகாரணமாக இருந்தது என்பதை உணர்த்த 'எவ்வுயிர்க்கும் தாயோன்' என்றார்.

தாய் தந்தையர் கொண்ட காமமே மூலகாரணமாக இருந்து பின் உடல் பெறுவதற்கு உதவுகிறது என்பது உலகியல் ஆதலின் காமமே எல்லாவிதமான படைப்புகளுக்கும் வித்து என்பது கருதி படைப்பு நிலைக்குக் காமனாகிய 'ப்ரத்யும்நன்' உரியவனாகிறான்.

உலகில் காமத்தை உண்டாக்குவதில் 'பொன்னுக்கு மிகுந்த இடம் உண்டு. மூன்று ஆசைகள் என்று பொன், மண், பெண் என்ற மூன்றையும் குறிப்பிடுவர்.

*''மாஏழ் சனனம் கெட மாயைவிடா*
*மூ வேடனை என்று முடிந்திடுமே''*

என்பது கந்தர் அநுபூதியில் அருணகிரியார் கூறுவது.

இந்த மூன்று ஆசைகளையும் வரிசைப்படுத்தும்போது,

*''பொன் நிலம் மாதர் ஆசை பொருந்தினர் பொருந்தார் உள்ளம்
தன்னில் அந்தரத்தில் ஜீவசாட்சியாய் மறைந்து நிற்கும்
எந்நிலங்களினும் மிக்க எழுநிலம் அவற்றின் மேலாய்
நன்னிலம் மருவும் ஏக நாயகன் பதங்கள் போற்றி''*

என்று கைவல்ய நவநீதம் கடவுள் வணக்கப்பாடல் பொன்னையே முதலில் கூறுகிறது.

'பெண் ஆசை' என்பது இளம்பருவத்தில் இல்லை - முதிய பருவத்தில் ஒரு நிலையில் சாய்ந்து தொய்ந்து மடங்கிவிடும்.

'மண் ஆசை' என்பது நம்மின் வேறாக இருப்பது எல்லோரையும் எட்டுவதில்லை.

''பொன் ஆசை'' என்பது நம் உடம்பின் மேல் ஏறிக் கொள்கிறது. நம்மை உற்சாகப்படுத்துகிறது, உணவு, உடை, உறையுள் என்று நம் வாழ்க்கையின் எல்லாக் கூறுகளுக்கும் தேவைப்பட்டு நம்மால் ஈட்டவும், சேர்க்கவும், பாதுகாக்கவும், பயன்படுத்தவும் படுகிறது - அதனால் காமங்களில் மிக்கது பொன்னாசையே -

ஒரு காலத்தில் பொன்னே நாணயமாயிற்று. இன்றும் நாணய மாற்று விகிதத்தை உறுதிசெய்வதில் பொன்னே முதல் இடம் பெற்றுள்ளது. அதனால் படைப்புக்குரிய நிலையாகிய காமன் என்கிற 'ப்ரத்யும்நனை'க் குறிப்பிடும்போது, அவனது கண்கள் ''பொன் கண்'' என்று பரிபாடல் குறிப்பிடுகிறது. காமத்துக்குப் பொன் மிகவும் பொருத்தமானது அல்லவா!

'ப்ரத்யும்ந:' என்பது விஷ்ணுசஹஸ்ர நாமத்தில் 640வது திருநாமம். செல்வம் மிக்கவர் என்பது பொருள். 'பொன்' என்று அழைக்கப்படும் திருமகளைத் தன் இதயத்தில் உடையவர் ஆதலின் பகவானை விடச் செல்வம் மிக்கவர் யார்? தன்னிலேயே திருவை உடையவர் அவர் அல்லவா.

நமது மனத்திற்குத் தேவதையாக மனத்தை ஆட்டிப் படைக்கின்ற காமதேவனின் வடிவம் ப்ரத்யும்நர். ''ஸ மந: ஸர்வ பூதா நாம் ப்ரத்யும்ந: பரிபட்யதே'' (மஹா பாரதம் - சாந்திபர்வம் 339, 38) த்யும்நம் - ஆசை; ப்ரத்யும்நம் - மேலும் மேலும் வளரும் ஆசை, ஆசையின்றி வாழ்வு இல்லை.

ஒவ்வொரு கணத்திலும் மனம் ஏதாவது ஒன்றைப் பற்றிக் கோட்டை கட்டி அதை அடைய முடிகிறதோ முடியவில்லையோ அதற்காகவே வாழ்க்கையைத் துன்பமாக ஆக்கிக்கொள்வதே மனித இயல்பு. மனம் உடையவன் மனிதன்.

*''ஒரு பொழுதும் வாழ்வ தறியார் கருதுவ*
*கோடியும் அல்ல பல''*

என்பது திருக்குறள்.

அடுத்த வேளை நாம் இருக்கப் போகிறாமா இல்லையா என்பது தெரியாது. நம் ஆசையோ கொடிகட்டிப் பறந்து உலகை வளைக்க மனத்தளவில் கிளம்பிவிடுகிறது. இந்த ஆசைக்கு மூலகாரணமாகிய மனத்தின் மூலதத்துவம் ப்ரத்யும்நர். இவரே பகவானது வ்யூகத்தில் மூன்றாம் நிலையில் இருந்து படைப்பைத் தூண்டுகிறவர்.

(தொடரும்)


## உங்கள் கவனத்திற்கு

**நமது மிஷன் சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்களுக்கும் தொடர்புக்கொள்ள வேண்டிய முகவரி :**

51/24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600083
Telephone : 044-24895875

**தொடர்புக்கொள்ள வேண்டிய நேரம்:**

காலை 8.00 மணி முதல் 12.00 மணி வரை,
மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

- ஆஸ்ரமம் / வேதபாடசாலை / ஸ்ரீ கல்யாணஸ்ரீனிவாஸ பெருமாள் திருக்கோயில் / நாமபிரச்சாரம்.
- ஸ்ரீ ஸ்வாமிஜியின் தரிசன நேரம் / உத்ஸவ நேரம்
- 'மதுரமுரளி' சந்தா புதுப்பித்தல், தகவல்
- மிஷன் வெளியீடுகள் / ஒலி நாடாக்கள் (Cassettes)
- நன்கொடைகள்

முதலியவற்றுக்கும் மேற்கண்ட முகவரியை அணுகவும்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 38

நத்தியாபாய், 1900 வருஷம் நந்தகிராமத்திலிருந்து ஐந்து மைல் தொலைவிலுள்ள உமராலா என்னும் கிராமத்தில் பிறந்தாள். அவளது பெற்றோர்கள் செல்வந்தர்களாகவும் சாது சேவை செய்வதில் சிறந்தவர்களாகவும் இருந்தனர். அனேகமாக, வ்ரஜவாஸிகள் அனைவரும் சாது சேவை செய்வார்கள். இன்றும் வ்ரஜத்தில் அனேக மஹாத்மாக்கள் வ்ரஜவாஸிகளின் பிக்ஷையை பெற்றுக் கொண்டு தடையின்றி பஜனை செய்து வாழ்கிறார்கள். சாதுக்களிடம் வ்ரஜவாஸிகளுக்கு ஸஹஜமாக ஒரு பக்தி **பா**வம் உண்டு. அது மற்ற எந்த க்ஷேத்திரத்திலும் காணக் கிடைக்காது. நத்தியாபாயின் குடும்பம், வ்ரஜத்தில் சாதுசேவை செய்வதிலும் பகவத் சேவை செய்வதிலும் மிகவும் பெயர் பெற்று விளங்கியது. பிறந்திலிருந்தே நத்தியாபாய் தன் மனிதப் பிறவியை அர்த்தமுள்ளதாக ஆக்கிக்கொள்ள ஒரேவழி பகவானின் சேவையும் சாதுக்கள் தொண்டும் தான் என அறிந்திருந்தாள். பகவானும் சாதுக்களுக்கு செய்யும் தொண்டினால் மகிழ்ச்சியடையும் அளவுக்கு தனக்கு செய்யும் தொண்டினால் கூட ப்ரீதி அடைவதில்லை.

நத்தியாபாய் தினமும் சாதுக்களை சந்தித்து வந்தாள். மிகவும் ப்ரேமையுடன் சாதுக்களுக்கும், பகவானுக்கும் தொண்டு செய்து அன்னை தந்தைக்கு உதவுவாள். அவளது இளம்பருவத்திலேயே அன்னை தந்தை இறந்தனர். பிறகு ஸாதுக்களுக்கு தொண்டு செய்யும் முழுபொறுப்பும் அவளது சகோதரனுக்கு சேர்ந்தது. இருவரும் சேர்ந்து தொண்டு செய்ய ஆரம்பித்தனர்.

சில காலம் கழித்து சகோதரன் நத்தியாபாய்க்கு விவாஹம் செய்து வைத்தான். ஆனால், அவளது பிறவியே இறைவனுக்கும், அவனது அடியார்களுக்கும் தொண்டு செய்யவே ஏற்பட்டதல்லவா? கணவனுக்கு சேவை செய்ய அல்லவே! அவளது பதினைந்தாவது வயதில் அவளது கணவனும் இறந்தான். பிறந்தகம் வந்த நத்தியாபாய் தனது விதவை நிலையையும் பகவானுடைய வரப்ரஸாதமாக எண்ணி முன்பு போன்றே சாதுக்களுக்கும் இறைவனுக்கும் தொண்டு புரிவதிலேயே நான் வாழ்நாளை கழிக்கலானாள்.

சகோதரனிடம் செல்வத்துக்கு குறைவில்லை. அடியார்களிடம் பக்திக்கு குறைவில்லை. நத்தியாஜி மனமகிழ்ந்து கருத்துடன் அடியார்களுக்கு செய்யும் தொண்டினால், சகோதரனும் மகிழ்ச்சி அடைந்தான். அடியார்களும் இவர்களது சேவையினால் மனமகிழ்ந்தனர். இறைவனிடம் அடியார்கள் இந்த இருவருடைய நல்வாழ்வுக்காகப் ப்ரார்த்தித்துக்கொண்டனர்.

கடவுளின் எண்ணத்தை யார் அறிவர்? நத்தியாபாயின் சகோதரனும் இறந்தான். பிறகு, அவர்களுடைய சித்தப்பா ஸ்ரீபலராம் பகத் வீட்டில் தங்கி வந்தாள். அங்கும் அவளுக்கு அடியார்களின் தொண்டு செய்யும் பாக்யம் கிடைத்தது. சாதுக்களுக்கு தொண்டு செய்ததாலும், அவர்களது கூட்டுறவாலும் நத்தியாவுக்கு பூரணமாக உலக வாழ்விலிருந்து வைராக்யம் ஏற்பட்டது. கிரமப்படி தீக்ஷையும், விரக்தவேஷமும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு தோன்றியது. அவளது பாக்யத்தால் ராதாமோஹன்ஜி என்பவர் கோவிலில் இருந்த விஷ்ணுஸ்வாமி ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த பரமவிரக்தரான ஸந்த்பாபா ராமரதன்தாஸ்ஜி உம்ராலா கிராமத்துக்கு வந்தார். நத்தியா அவரிடம் தீக்ஷையும் உடையும் பெற்று இறைவழியில் ஈடுபடலானாள்.

தீக்ஷைக்குப் பிறகு நத்தியாவுக்கு, சிற்றப்பா வீட்டில் இருப்பது உசிதமல்ல என தோன்றியது. பிஹாரிஜியின் படத்தையும் அவனை எழுந்தருளப் பண்ண ஒரு பலகையையும் எடுத்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள். அருகிலிருந்து பாத் என்னும் கிராமத்திலுள்ள ஸ்ரீமதி பானாதேவி என்னும் பெண்மணியை சரணடைந்தாள். பானாதேவியும் வீட்டுக்கு வெளியே உள்ள ராதாதேவியின் கோவிலில் பஜனை செய்து வாழ்ந்து வந்தாள். நத்தியாவும் அவளுடன் சேர்ந்து பஜனை செய்ய ஆரம்பித்தாள். பானாதேவி நத்தியாவை தனது புதல்வியாக எண்ணி அன்புடன் நடத்தினாள்.

நத்தியாவுக்கு மனதில் சாந்தி இங்கும் ஏற்படவில்லை. அவளுக்கு ப்ருந்தாவனம் செல்லவேண்டும், அங்கு பஜனை செய்ய வேண்டும், பிஹாரிஜியின் அருகில் வசிக்க வேண்டும், அவனது அடியார்களுக்கு தொண்டு புரிய வேண்டும் என்று அவா ஏற்பட்டது. பானாதேவியிடம் தன்னுடைய விருப்பங்களை மெதுவாகத்

தெரிவித்தாள். அவளும், நத்தியாவின் மனதை புரிந்துகொண்டு அவளுக்கு ப்ருந்தாவனத்தில் யமுனைக்கருகில் ஒரு வாடகை வீடும் அவள் வாழ்வை கழிக்கத் தேவையான பொருள்களும் கிடைக்குமாறு ஒரு ஏற்பாடும் செய்து தந்தாள்.

நத்தியா, ப்ருந்தாவனத்தில் பிஹாரிஜிக்கும் அவனது அடியார்களுக்கும் மனமுவந்து தொண்டு செய்து வந்தாள். தினமும் காலையில் 4 மணிக்கு எழுந்து பிஹாரிஜியின் இனிப்பு ப்ரஸாதம் செய்வதற்காக ஐந்துபடி கோதுமை அரைத்துத் தருவாள். மாவு அரைக்கும்போது பிஹாரிஜியின் லீலைகளை மதுரமாகப் பாடுவாள். பொழுது புலர்ந்ததும் ப்ருந்தாவனத்தை பரிக்ரமா செய்வாள். திரும்பி வந்து ஸாதுக்களுக்கு ரொட்டி தயார் செய்வாள். எத்தனைபேர் வந்தாலும் அலுக்காமல் பிக்ஷை அளிப்பாள். அடியார்களின் ருசிக்கேற்ப உணவு தயாரித்துத் தருவாள். காய்கறிகளை உடனுக்குடன் சமைத்துப் பரிமாறுவாள். நேரம் கிடைக்கும்போது அடுத்த நாள் பிஹாரிக்கு அரைக்க வேண்டிய கோதுமையை சுத்தம் செய்து கொள்வாள். மாலையில் பிஹாரிஜியின் கதை, கீர்த்தனம் கேட்பாள், ராஸலீலை பார்க்கச் செல்வாள். இருவேளையும் பிஹாரிஜியின் தர்சனம் செய்வாள். இப்படி அவளது நாள் முழுவதும் இறைசேவையிலும் அடியார் தொண்டிலும் கழியும்.

அடியார்கள் மத்தியில் அவளது புகழ் பரவியது. பெரிய பெரிய மஹான்களும் நத்தியாபாயிடம் மதுகரிக்கு வர ஆரம்பித்தான். ஸ்ரீ ரங்கதாஸ்பாபா, ஸ்ரீ ப்ரியசரண்பாபா, ஸ்ரீ ஹரிபாபா, ஸ்ரீ பாலகிருஷ்ணதாஸ்பாபா போன்றவர்கள்கூட அவளிடம் வந்து பிக்ஷை எடுத்துக்கொண்டனர். சாதுக்கள் மட்டுமின்றி பக்தர்களுக்கும் தனவந்தர்களும் கூட நத்தியாபாயிடம் உணவு பெற்றுக் கொள்ள வந்தனர். கல்கத்தா, பம்பாய், ஜய்பூர், லூதியானா போன்ற நகரங்களில் உள்ள பக்தர்கள் கூட, ப்ருந்தாவனத்திலிருந்து வரும் போது எங்களுக்கு நத்தியாபாயி செய்த உணவை வாங்கி வாருங்கள் என்று சொல்லி அனுப்புமளவு அவள் ப்ரசித்தி அடைந்து விட்டாள். அவளுடைய சேவை விரிவடைந்ததுபோல் அவளது பண்டகசாலையும் விரிவடைந்தது. மக்கள் அவளிடம் மனமுவந்து தன் தான்யங்களைக் கொண்டுவந்து குவித்தனர். பஞ்சாப், ஹரியானா போன்ற இடங்களிலிருந்து ட்ரக்குகளில் தான்யம் வந்தது.

ப்யாரேலால், ஹரிவம்சா் என்ற இருசகோதரா்கள் போக்குவரத்து கம்பெனியின் கமிஷன் ஏஜண்டாக பணிபுரிந்தனா். இவா்கள் எப்படியாவது நத்தியாபாயிக்கு ஏதாவது ட்ரக்கில் தான்யங்களை அனுப்பிவிடுவாா்கள். சிறிது காலத்தில் அவா்களே போக்குவரத்து கம்பெனி ஆரம்பித்தனா். நத்தியாபாயின் அருளால்தான் தாங்கள் முன்னேறினோம் என்று மனப்பூா்வமாக நம்பினா்.

அடியாா் தொண்டு செய்ய நத்தியாபாயின் சமயலறையில் எதுவும் குறைவில்லாமல் பொருள்கள் இருக்கும். ஒரு சமயம் அவளிடம் கடவுளின் லீலையால் கோதுமை இல்லாமல் போய் விட்டது. மறுநாள் சேவைக்கு ஒரு மணி கோதுமைகூட இல்லை. என்ன செய்வது? சிலா் கூறினா், ''கிச்சடி செய்து விடு'' என்று. அவள் ''சாதுக்கள் இங்கு ரொட்டி உண்ண வருகிறாா்கள். நான் எப்படி கிச்சடி செய்வேன். பிஹாரிஜியின் திருவுள்ளம் இருந்தால் கோதுமைக்கு ஏற்பாடு செய்யட்டும். இல்லாவிட்டால் அடியாா்கள் உணவின்றி பிக்ஷையின்றி செல்வாா்கள். தோஷம் பிஹாரிஜியின் மீதுதான் விழும்! நான் என்ன செய்வேன்'' என்று கூறினாள்.

அன்று மாலையே ஒரு மூட்டை கோதுமை எப்படியோ வந்து சோ்ந்தது. வெகுநாட்களாக உத்திரபிரதேசத்துக்கும ஹரியானாவுக்கும் உள்ள எல்லையில் வரி காரணமாக எடுத்துச் செல்லமுடியாமல் கிடந்த மூட்டையாம் அது! அவளிடம் அன்று வந்து சோ்ந்தது.

நத்தியாபாயிக்கு மூன்று, நான்கு மாடுகளும் சாது சேவைக்காக யாரோ அளித்திருந்தனா். அவள் கோ சேவையும் செய்வாள். சாதுக்களுக்கு பால், தயிா், நெய், மோா் என்று அளித்து மகிழ்வாள். நாளாக நாளாக நத்தியாபாய் ஒருத்தியாக இத்தனை காாியங்கள் செய்யமுடியாமல் சிரமப்பட்டாள். பிஹாாிஜி உடனே வயதான ஸ்ரீ கோவா்த்தனதாஸ்பாபாவை நத்தியாவிடம் அனுப்பி அவளுடன் சோ்ந்து சேவை செய்ய வைத்தான்.

ஒருமுறை கோதுமை குறைந்துவிட நத்தியா பக்கத்து கிராமத்துக்கு சென்று கோதுமை பெற்று வரப்போனாள். அங்கு அவளுக்கு கோதுமை மூட்டைகள் தந்தனா் பக்தா்கள். அதை ஒரு ட்ராக்டாில் போட்டு ப்ருந்தாவனம் வந்துகொண்டிருந்தாள். அன்று

கடை அடைப்பு இருந்ததால் நேரான வழியை தவிர்த்து வேறு ஒற்றையடிப்பாதையில் வண்டி சென்றது. அங்கும் இரண்டு பேர் துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தனர். பிஹாரிஜியின் அருளால் அவர்கள் மனம்மாறி ட்ராக்டரை செல்ல அனுமதித்தனர். பாதி வழியில் ட்ராக்டர் ஓட்டுபவனுக்கு வழி தவறிவிட்டது. அருகில் விசாரிக்க ஒருத்தரும் இல்லை. ட்ராக்டர் நடுவழியில் அப்படியே நின்றுகொண்டு இருந்தது. அப்போது ஒரு பத்து வயது இடைச் சிறுவன் அங்கு திடீரென்று வந்தான். நத்தியாபாய் அருகில் வந்து ''அம்மா! வழிமறந்து விட்டதா என்ன? நான் உன்னை தினமும் பரிக்ரமா (வலம்) செய்யும்போது பார்த்திருக்கிறேனே! வா! உனக்கு நான் வழி காட்டுகிறேன்'' என்றான். சொல்லிக்கொண்டே ட்ராக்டரில் ஏறிக்கொண்டு வழி சொல்லிக்கொண்டே ப்ருந்தாவனம் அருகில் வந்ததும் திடீரென்று குதித்து இறங்கி மறைந்தான். நத்தியாபாயிடைய மனதில் அவனது சுந்தர வடிவமும் காதுகளில் அவனது மதுரமான குரலும் நிறைந்துவிட்டது. இதை நினைத்து நத்தியாபாய் தன் வாழ்நாள் முழுவதும் கண்ணீர் பெருக்கினாள். அவளுக்கு பிஹாரிஜிதான் தனக்கு வழிகாட்டினான் என்று புரிந்துவிட்டது. அவனது அடியார்களுக்கு உணவு சமைக்க தானியம் எடுத்துச் செல்லும் அவளுக்கு அவன் ஏன் உதவ மாட்டான்?

பிஹாரிஜியின் க்ஷணநேர சங்கத்தால் நத்தியா அவனை மீண்டும் சந்திக்க வேண்டும் என கவலை அடைந்தாள். எப்பொழுதாவது அவன் வந்து தான் செய்த உணவை சாப்பிட வரமாட்டானா என்று ஏங்கினாள். விரஹத்தால் தவித்தாள். தான் இனி அதிக நாள் வாழமாட்டோம் என அறிந்தாள். தான் செய்த டாகுர்சேவா, சந்த்சேவா, கோசேவா ஆகியவை தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று விரும்பினாள். பக்தர்கள் உதவியுடன் ஸேவாகுஞ்சத்துக்கு அருகில் உள்ள மான்கலியில் ''ராதிகா நிகேதன்'' என்ற ஆச்ரமத்தை நிறுவினாள். ஒரு ட்ரஸ்ட் ஏற்படுத்தி தொடர்ந்து தொண்டுகள் நடைபெற வசதி செய்தாள். இன்றுவரை அந்த ஆச்ரமத்தில் சேவைகள் நடந்து வருகின்றன. 1981ம் வருஷம் ஜனவரி மாதம் 25ந்தேதி நத்தியாபாய் பிஹாரிஜியின் நித்யநிகுஞ்சத்தை அடைந்தாள்.

**— ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ ஸ்வாமியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 119

*தைரியமோடு உன் மெய்யக நாடயான்*
*கட்டழிந்தேன் அருள் அருணாசலா*

பற்பல பிறவிகளில் செய்த புண்ணியங்களினால் மட்டுமே ஒரு உத்தமமான மஹாத்மாவின் ஸங்கம் (தொடர்பு) கிடைக்கப் பெறுகிறது. ஆத்மசாதனை பழகி வரும் காலங்களில், ஆத்ம தரிசனம் பெறுவதற்கு முக்கிய தடையாக இருப்பது சந்தேகமே! அஃதாவது, இந்த ஆத்மசாதனைகள் சரியான பலனளிக்குமோ என்ற சந்தேகம் இருத்தலாகாது. இத்தகைய ஒரு அவநம்பிக்கையை ஏற்படுத்துவோரின் தொடர்பையும் வைத்துக்கொள்ளக் கூடாது. மனதில் உள்ள சந்தேகத்தை எவ்வகையிலேனும் நீக்கி விடவேண்டும். நம்பிக்கையுடன் கூடிய சாதனைகள்தான் பலிக்கும்.

அல்பமான மனிதர்களின் நட்பு நமக்கும் அதுபோன்ற எண்ணங்களையே தரும். நாமும் அதுபோலவே ஆகிவிடுவோம். ஆதலால், மனிதப்பிறவியை பயனுள்ளதாக ஆக்கிக்கொள்ள விரும்புவர்கள் சத்சங்கத்தை அடைந்து, தத்வ விசாரம் (ஆராய்ச்சி) செய்ய வேண்டும். 'யோகவாஸிஷ்டம்' எனும் பிரஸித்தி பெற்ற ஒரு வேதாந்த நூல், ''சத்சங்கத்தை அடை, மஹாத்மாக்களின் உறவை தேடி பெற்று கொள்வாயாக'' என்று கூறுகிறது. வேதாந்த தத்துவங்கள் மனதில் ஊற ஊற மனத்தின்கண் உள்ள அழுக்குகள் எல்லாம் சிறிது சிறிதாக நீங்கி, மனதை செம்மையாக்கி, சாதனைகளில் ஊக்கம் தந்து, அவை பலனைத் தருவதற்கு மிகவும் ஹேதுவாக (சாதகமாக) அமையும்.

இந்த ஆத்மதரிசனம் பெறுவதற்கு யாதொரு Qualification-ம் தேவை இல்லை. கல்வியறிவு அவசியமில்லை. ஆத்மதரிசனம் பெறவேண்டும் எனும் உண்மையான ஆர்த்தி (விருப்பம்) மட்டும் தேவை. இப்படி உண்மையான அவா இருந்து, ஒரு உத்தமமான குருவை அண்டி, அவர் காட்டும் உபதேசத்தை கடைப்பிடித்து, அதில் யாதொரு சந்தேகமுமில்லாமல், சரியான பரிபக்குவத்துடனும் (அசாதாரணமின்றி இயல்புடனும், பணிவுடனும்), குருவிடம்

சரணாகதியையும் (ப்ரியமுடன் பலனை எதிர்பாராது குருவிடம் தனது ஸகலத்தையும் அர்ப்பணித்தல்) பழகிவந்தால், ஆத்மதரிசனம் நிச்சயம் ஏற்படும். இதில் ஐயமில்லை. ஐயம் என்பதற்கு இடமே இல்லை எனலாம்.

குருவிடம் சரணாகதி செய்து பழகும் சாதனைகளுக்கு என்ன அனுகூலம் எனில், அப்படி பழகுவோருக்கு இடையூறுகளே வாராது. அப்படி ஒருக்கால் இடையூறுகள் வரின், அது சாதனைகளில் தடங்கலை ஏற்படுத்தாது. சாதனைகளில் வழுவாதிருந்துவிடுவோம். ஏனெனில், குருவின் அருளானது, இடையூறுகள், சரணாகதி செய்தோரை பாதிக்காது இருக்க செய்துவிடும். துருவன் சிறுபிராயத்தில் தவமியற்ற சென்றாலும், நாரதரின் குருவருளால் அவனுக்கு யாதொரு தீங்கும் ஏற்படவில்லை என்பதையும், விசுவாமித்திர முனிவர் சகல பலமும் சித்தியும் பெற்றவராயினும் மேனகையின் அழகில் மயங்கியது குருவருள் இல்லாது போனதினால் என்பதையும் இவ்விடத்தில் ஒப்பு நோக்கினால் இது எளிதில் விளங்கும்.

குருநாதனின் அனுக்ரஹமும், தெய்வத்தின் அனுக்ரஹமும் ஒருவருக்கு வஜ்ரகவசமாய் இருந்து, சகலவிதத்திலும், சாதனைகளிலும் பாதுகாப்பு அளித்து காப்பாற்றிவிடும்.

'கட்டழிந்தேன் அருள்' - அருணாசலா, ஒருக்கால் நான் எனக்கு வரும் இடையூறுகளினால் நிலைகுலைந்து போவேனாயின், அதனால் நான் தடுமாறாது என்னைக் காப்பாற்றி அருள் செய் எனும் பொருள்படுமாறு அமைந்துள்ளது.

ஆத்மசாதனைகள் பழகும் ஒருவருக்கு கஷ்டமே வராது என்று சொல்ல முடியாது. அப்படி சொல்லி எவரையும் ஆன்மீகத்திற்கு அழைக்கவும் முடியாது. ஏனெனில், உலகம் என்று ஒன்று உள்ளவரையில் சுகம் என்றும், துக்கம் என்றும் ஏற்படுவது தவிர்க்க முடியாதது ஆகும், இது உலக இயற்கை. சுக, துக்கங்களை வென்றவன் ப்ரும்மஞானி மட்டுமே!

ஆக வேதாந்த மார்க்கத்தில் சென்று ஆத்மஞானமடைய பாடுபடுவதின் நோக்கம் என்னவெனின், சுகமும், துக்கமும் நம்மை பாதிக்காது இருக்க செய்துகொள்ளவே! சுகதுக்கங்களால் பாதிக்கப்படாத

ப்ரும்மஞானியின் தொடர்பை பெறுவதே இதற்கு இன்றியமையாதது ஆகிறது. சுக, துக்கங்களை வென்றவராக ஒரு ஞானி இருப்பதால் அவரின் தொடர்பானது நமக்கும் அத்தகைய பரிபக்குவத்தை கொடுக்கும்.

சுகதுக்கங்களில் மனதானது ஈடுபடாமல் காக்க சாதனை அவசியம். சாதனையில்லையேல் சுக, துக்கங்களினால் ஏற்படும் பாதிப்பு இருக்கவே செய்யும். சாதனையும், குருவருளும் சேர்வது தான் பலனை அளிக்கும்.

நிலத்தை உழுது, விதை விதைத்தால் மட்டும் போதுமா என்றால் போதாது. ஏனெனில் மழையானது மேலிருந்து வந்தால்தான் பயிர் விளையும். அதேபோல், மழை மட்டும் இருந்து நிலத்தை உழவில்லை எனில் யாது பயன்? இங்கு உழுவது என்பது சாதனையை குறிக்கிறது. மழைதான் குருவருள் என்பது. சாதனையும், குருவருளும் இணைவது வெகுசீக்கிரத்தில் பலனை கொடுக்கும்.

*'தைரியமோடு உன் மெய்யக நாடயான்'* - அருணாசலா! இப்படி பல வேதாந்த தத்துவங்களை கேட்டு அறிந்து, உன்னை அடைய தைரியமோடு சாதனைகளில் இறங்கிவிட்டேன். நடுவில் ஏற்படும் கஷ்டங்களிலிருந்து என்னை காப்பாற்றி விடு என்பது போலுள்ளது. மேலும், கஷ்டங்களை வரவிடாமல் செய் எனும் பொருள்படவில்லை. கஷ்டங்கள் எனது சாதனைகளை தடை செய்யாதிருக்குமாறு பார்த்துக்கொள் என்பது போலுள்ளது. ஏனெனில், ஒரு கஷ்டத்தை விலக்கினால், வேறு ஒரு கஷ்டம் வரத்தான் செய்யும். கஷ்டம் வராமல் இராது. சமுத்திரத்தில் அலை ஓய்வதில்லை. ஒன்றன்பின் ஒன்றாக அலைகள் வந்தவண்ணம் உள்ளதல்லவா? அதுபோலவே, சுக, துக்கங்கள்.

அவரவரின் கர்மவினைப்படி (புண்ய, பாவங்களின் தொகுப்பு) அவரவர்களும் சுகமும், துக்கமும் ஏற்பட்டே தீரும். வேண்டாம் என்று சொன்னாலும் விடாது. இது ஞானிகளுக்கும் பொருந்தும். ஆயின் அப்படி ஏற்படும் சுக, துக்கங்கள் ப்ரும்மஞானிகளை பாதிப்பது இல்லை என்பதே அறிந்துகொள்ள தக்கது ஆகும்.

(தொடரும்)

# செய்திகள்

### அக்டோபர் 4-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதி வரை

மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் நவராத்ரி உத்ஸவம் மதுரபுரி, பாகவதபவனத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது. தினமும், காலையில் ஸ்ரீமத் பாகவத பாராயணமும், ஸ்ரீ ப்ரேமிக வரதனுக்கு விசேஷ பூஜையும் நடைபெற்றது. பின்னர், ஸ்ரீ ஸ்வாமிஜி அனைவருக்கும் தீர்த்தப்ரஸாதம் வழங்கினார்கள். தினமும் மாலையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

4-ஆம் தேதி அன்று செல்வி. அஞ்சலி நாராயணன் அவர்களின் பரதநாட்டியமும்,

5-ஆம் தேதி அன்று செல்வி. க்ருத்திகா நடராஜனின் பாட்டும்,

6-ஆம் தேதி அன்று செல்வி. அபர்ணா அவர்களின் பாட்டும், ஸ்ரீமதி பத்மஸ்ரீ அவர்கள் குழுவினரின் இசை நிகழ்ச்சியும்,

7-ஆம் தேதி அன்று செல்வி. க்ருபா அவர்களின் பாட்டும், செல்வி. ஸாத்விகா அவர்களின் நடனமும் நடைபெற்றது. செல்வி. ஸாத்விகா பாலஸ்ரீ விருது பெற்றவர்.

8-ஆம் தேதியன்று ஸ்ரீதேவி ந்ருத்யாலயா குழுவினரின் நடன இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்தக் குழுவினர், ஏற்கனவே சில வருடங்கள் முன் நடைபெற்ற நவராத்ரி உத்ஸவத்தில் பங்குகொண்டு ''பால ராமாயணம்'' நாட்டிய நாடகத்தை நிகழ்த்தினார்கள்.

இப்பொழுது 'க்ருஷ்ணலீலை', ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமிகள் பஞ்சரத்னம், லவகுசா போன்ற நடன நிகழ்ச்சிகளை நிகழ்த்தினார்கள்.

9-ஆம் தேதியன்று நம் ஸத்ஸங்க மஹிளா மண்டலியினரின் பஜனை நடைபெற்றது. அவர்கள் ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனைகளைப் பாடினார்கள்.

10-ஆம் தேதியன்று ஸ்ரீமதி ரேவதி நரஸிம்மன் அவர்களின் சிஷ்யைகளின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

11-ஆம் தேதியன்று செல்வி. க்ருபாலக்ஷ்மியின் நடனமும் செல்வி அர்ச்சனா, ஆர்த்தி குழுவினரின் பாட்டும் நடைபெற்றது.

தினமும், மாலை ஸ்ரீ மல்லிகார்ஜுன ஸோமயாஜி அவர்களால் ''ஈசாவாஸ்ய உபநிஷத்'' பற்றி உபன்யாஸம் நடத்தப்பட்டது. இரவு ''ராதிகா சதகம்'' பாடப்பட்டது.

அக்டோபர் 11-ஆம் தேதி ராதா கல்யாணத்துடன் ராதிகாசதகம் பூர்த்தியானது.

11-ஆம் தேதியன்று பூர்த்தியை ஒட்டி ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை வழங்கினார்கள். நவராத்ரி உத்ஸவம் இனிதே நிறைவடைந்தது.

### அக்டோபர் 12-ஆம் தேதி விஜயதசமி, புரட்டாசி சிரவணம் —

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாள் அவதாரதினத்தை ஒட்டி - சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி, ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாளுக்கு திருமஞ்சனம் செய்தார்கள். ஸ்ரீநிவாஸபெருமாளுக்கு புஷ்பபந்தல் அமைக்கப்பட்டு அலங்காரம் செய்யப்பட்டது. 24 வகையான பக்ஷணங்கள் சித்ரான்னங்கள் நிவேதனம் செய்யப்பட்டது.

### அக்டோபர் 1-ஆம் தேதி

புரட்டாசி மூன்றாம் சனிக்கிழமையை ஒட்டி மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில் உத்ஸவர் ஸ்ரீ பக்த குதூஹலன் குண்டுபெரும்பேடு, வல்லாரை, கொளத்தூர் முதலான கிராமங்களுக்கு புறப்பாடு கண்டருளினார்.

புறப்பாட்டில் பக்த பெருமக்கள் ''ஹரே ராம'' மஹாமந்திரத்தை கீர்த்தனம் செய்தனர்.

### அக்டோபர் 8-ஆம் தேதி

புரட்டாசி நான்காம் சனிக்கிழமையை ஒட்டி உத்ஸவர் ஸ்ரீ பக்த குதூஹலன் மணிமங்கலம் கிராமத்திற்கு புறப்பாடு கண்டருளினார்.

## ப்ரேமிகவரதன் மருத்துவமனை - சிறப்பு முகாம்கள்

**அக்டோபர் 2-ஆம் தேதி**

சாந்தீபனி குருகுலம் டிரஸ்ட் சார்பில் மதுரபுரி ஆஸ்ரமத்தில் சந்த் ஏகநாத் ஹாலில், ப்ரேமிகவரதன் மருத்துவ முகாம் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

Dr. கிரிராஜ், Dr. (Mrs.) தீபா கிரிராஜ் அவர்கள் கிராமத்து பெண்களுக்கு பெண்கள் மகப்பேறு மருத்துவம் பற்றி விளக்கம் அளித்தனர்.

**அக்டோபர் 16-ஆம் தேதி**

சாந்தீபனி குருகுலம் டிரஸ்ட் சார்பில் Vasantha Memorial Trust, Coimbatore நிறுவனர், புற்றுநோய் சிகிச்சை நிபுணர், Dr. ராமநாதன் அவர்கள் காலை முதல் மாலை வரை மதுரபுரி அருகில் உள்ள மஹாரண்யம், கொளத்தூர், குண்டுபெரும்பேடு முதலான கிராமங்களுக்கு விஜயம் செய்து, புகைபிடித்தல் மற்றும் புகையிலை, பான் பாக்குகள் பயன்படுத்துதல் முதலியவற்றால் ஏற்படும் தீயவிளைவுகளை பற்றியும், அவற்றின் முக்கியமான ஆரம்ப அறிகுறிகள் பற்றியும் விளக்கும் செய்திபடம் திரையிடப்பட்டு மக்களுக்கு விளக்கம் அளித்தனர்.

மாலை 3 மணியளவில் சென்னை, குருஜி மெட்ரிகுலேஷன் பள்ளி ஆசிரியைகள், மாணவர்கள், சத்சங்க அன்பர்கள் முதலியோருக்கு புற்றுநோய் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.

---

**ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை**

Personal Secretary to

**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

51/24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083

Telephone : 044-24895875

என்ற முகவரிக்கு அனுப்பவும்.

e-mail : contact@madhuramurali.org

**மங்களானி பவந்து**